## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

**(17.01.2024 முதல் 21.01.2024)**

**அறிக்கைஎண்: 05/2024** **தேதி : 16.01.2024**

### அரியலூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31 - 32 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 21 - 22 °செ ஆகவும் பதிவானது.

### அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (17.01.2024 முதல் 21.01.2024).

| கடந்த வார வானிலை (12.01.2024 முதல் 15.01.2024) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (17.01.2024 முதல் 21.01.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 12/01 | நாள்-2 13/01 | நாள்-3 14/01 | நாள்-4 15/01 | தேதி | நாள்-1 17/01 | நாள்-2 18/01 | நாள்-3 19/01 | நாள்-4 20/01 | நாள்-5 21/01 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 31 | 32 | 31 | 32 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 32 | 31 | 32 | 31 | 31 |
| 22 | 22 | 22 | 21 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 21 | 21 | 20 | 20 | 19 |
| 5 | 6 | 4 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 1 | 0 | 0 | 0 |
| 83-56 | 91-63 | 90-61 | 95-55 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-40 | 90-40 | 90-40 | 90-40 | 90-40 |
| 13 | 12 | 13 | 8 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 | 10 | 10 | 12 | 12 |
| கிழக்கு வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | கிழக்கு வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

### அரியலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 17.01.2024 முதல் 21.01.2024 வரை மழை இல்லை. அதிகபட்ச வெப்பநிலை 31 – 32 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19 - 21 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 - 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 – 12 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |

| | | |
|---|---|---|
| நெல் | அறுவடை | மழையால் நனைந்த முதிர்ந்த நெற்பயிரை உடனடியாக அறுவடை செய்து நன்கு உலர்த்தி சேமித்து வைக்கவும். |
| | | அறுவடை நிலையில் இருக்கும் முதிர்ந்த சம்பா நெல் வயல்களில் நெல் தரிசு ஊளுந்து பயிறு விதைக்கலாம். ஊளுந்துக்கு ஆடுதுறை – 3 ஆடுதுறை – 6 மற்றும் பச்சைப் பயறுக்கு ஆடுதுறை – 3 ஆகிய இரகங்கள் நெல் தரிசுக்கு ஏற்ற இரகங்கள் ஆகும். |
| தென்னை | காய்க்கும் பருவம் | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிர்ப்பதற்க்கு ஒரு மரத்திற்க்கு 200 மி.லி தென்னை டானிக்கை வேர் மூலம் கொடுக்க வேண்டும் |
| கால்நடைகளுக்கு | ஆடு மற்றும் மாடு | இரவில் குளிர்ந்த வெப்பநிலை நிலவுவதால் கால்நடைகளை குறிப்பாக இளம் குட்டிகளை தகுந்த கொட்டகைகளில் அடைக்கவேண்டும். மேலும் வெப்பமூட்டிகள் (எ.கா. குண்டு பல்பு) பொருத்தினால் நுரையீரல் அழற்சி ஏற்படாது. |

## குறுஞ்செய்தி

மழையால் நனைந்த முதிர்ந்த நெற்பயிரை உடனடியாக அறுவடை செய்து நன்கு உலர்த்தி சேமித்து வைக்கவும்.

.

**இயக்குநர்**